Thiru K. VINAYAKAM : **Sir, whereas the finances of the Municipalitis have very much depleted and they are not able to pay the salaries to the teachers—as a matter of fact, in one of the schools, viz., the Municipal High School, Walajapet, North Arcot district, the teachers have not been paid their salaries continuously for 3 or 4 months—will the Government consider the possibility of nationalising the entire municipal schools and bringing them under our Education Department ?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே பள்ளிகள் அவர்களுடைய கன்ட்ரோலில்தான் இருக்கின்றன. பள்ளிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதல்ல, நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளலாமா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. உள்ஆட்சிப் பள்ளிகளில் நிதிவசதி இல்லாத காரணத்தினால் அப்படி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. நம்முடைய நிதிவசதிக்கு ஏற்றவாறு எப்படி எடுக்கலாம் என்பது பற்றி பரிசீலனை செய்யலாம்.

* 276 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி தொழில், அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ள உயர்நிலை பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என அந்த நகராட்சி மன்றத்திடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படும் உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்வதில்லையென அரசாங்கம்முடிவெடுத்துள்ளது. எனினும் உயர்நிலைப் பள்ளிகளை நிர்வகிப்பதற்காக நகராட்சி மன்றங்களுக்கு அளிக்கும் தற்போதைய உதவித் தொகை வீதத்தை 50 சதவீதத்திலிருந்து 66-2/3 சதவீதமாக 1967-68 முதற்கொண்டு உயர்த்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகராட்சியின் எல்லைக்குள் உள்ள எல்லா உயர்நிலைப்பள்ளிகளும்—ஏறத்தாழ ஆறு உயர்நிலைப்பள்ளிகளும்—திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தின் கீழ்தான் இருக்கின்றன. நகராட்சி மன்றத்திற்குள் வருமானத்தின் பெரும்பகுதி இந்த உயர்நிலைப்பள்ளிகளுக்காகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. மற்ற நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இரண்டொரு பள்ளிகளையாவது அரசாங்கத் தரப்பில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், திருப்பூர் நகராட்சியைப் பொறுத்த வரையில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளும் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இருப்பதால், அப்படிப்பட்ட நகராட்சி மன்றங்களுக்கு இப்பொழுது கொடுப்பதாகச் சொல்லுகிற 66 சதவீதத்தை 75 சதவீதமாக உயர்த்திக் கொடுக்க இந்த அரசு விசேஷ சலுகை அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதிகப்படுத்துவதாக இப்பொழுது உத்தேசம் இல்லை. எதை எதை எடுக்க முடியுமோ அதை எடுப்பதற்கு பரிசீலிக்கலாம்.

Thiru K. VINAYAKAM : **Whereas this question seems to be a vicious circle, where want of finance is the trouble for the municipalities and want of finance is also a problem for the State Government, may I suggest, as suggested by our late Chief Minister Arignar Annadurai, why you should not revert to the old system of collecting fees from such of those as could afford to pay taking into consideration their social status ? Will the Government think of the possibility of reverting to the old system as suggested by our late Chief Minister Arignar Annadurai ?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய சொந்தக் கருத்தாகச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். தம்முடைய சொந்தக் கருத்தாகச் சொன்னால் தமக்கு ஆபத்து வந்து விடும் என்று கருதித்தான் அவர்கள் மாற்றிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய கட்சி இதைப்பற்றி என்ன சொல்லப் போகிறது என்று தெரியவில்லை. அவர்கள் தம்முடைய கட்சியின் சார்பில், " இலவசக் கல்வி வேண்டாம் " என்று தீர்மானம் கொண்டு வந்தால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கலாம். எங்களைப் பொறுத்த வரையில், நாங்கள் " இலவசக் கல்வி தேவை " என்று கருதுகிறோம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, அதிக மான தொகை கொடுக்க இயலாது, வேண்டுமானால் அரசாங்கமே உயர்நிலைப்பள்ளிகளை எடுத்துக்கொள்ளும் என்ற முடிவைத் தெரிவித் தார்கள். திருப்பூர் நகரத்தில் எல்லா உயர்நிலைப்பள்ளிகளுமே நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இருக்கின்ற காரணத்தால், அவற்றுக்கு முதல் சலுகையாக, வருகிற ஆண்டில் ஓரிரு பள்ளிகளை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எப்படியாவது ஒரு உறுதியை வாங்கி விடலாம் என்று கருதுகிறார்கள். அதை இப்பொழுது கொடுப்பதாக இல்லை.

பள்ளி மாணவர்களுக்கு சீருடை

* 277 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

தொடக்கப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவிகளுக்கு சீர் உடை வழங்குவதுபோல், மாணவர்களுக்கு உடை வழங்கும் உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளி சிறுவர்களுக்கு தாமே முன்வந்து நிகராடை (uniform) வழங்கும் தற்போதைய திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கும் மாணவிகளுக்குமிடையே வேறுபாடு எதுவும் செய்யப்படவில்லையாதலால், இவ்வினா எழவில்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : இந்த மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதைப் போல் ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று முன்னாள் கல்வியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கல்வி அமைச் சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், கல்லூரி ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கக்கூடிய முறையை மேற்கொள்ள அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது கூட அரசு சீருடைகள் வழங்குவதில்லை. ஆங்காங்கே உள்ளவர்கள் முன்வந்து இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். எல்லா ஆசிரியர்களைப் பொறுத்தும், அவர்களாகவே முன்வந்து அப்படிச் செய்து கொண்டால் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தனியார் நடத்துகிற சில பள்ளிகளில் ஆசிரியைகள் கட்டாயமாகச் சீருடை அணிந்திருக்கவேண்டும் என்ற முறை அமல் நடத்தப்படுகிறது. இதை விரிவுபடுத்தி எல்லா ஆசிரியைகளும் சீருடை அணியவேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டாயப்படுத்தினால் ஆபத்து.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரியில் குளிர்காலத்தில் அணிந்து கொள்ளுவதற்கென என்.ஜி.ஓ.வினருக்குக் கம்பள உடைகள் வழங்கு வதைப்போல், அங்குள்ள ஆசிரியர்களுக்கும் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?